# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 14 வியாழக்கிழமை 29.06.2023 கதிர் 13



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்



# இலக்குகளை அடையும் பொது நோக்கில் கைகோர்ப்போம்! ஹஜ்ஜுப் பண்டிகை வாழ்த்தில் ஜனாதிபதி ரணில் அழைப்பு

பிராந்திய மற்றும் உலகளாவிய இலக்குகளை அடைவதற்கான பொதுவான நோக்கத்தில் கைகோர்க்க ஹஜ்ஜுப்பண்டிகையின்போது உங்களை அழைக்கிறேன், என ஹஜ்ஜுப்பண்டிகையை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு வெளியிட்ட தனது வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மிகவும் கடினமான காலகட்டத்திற்குப் பிறகு, புதிய எதிர்பார்ப்புகளுடன் எதிர்காலத்திற்காக நாம் முயற்சிக்கும் தற்போதைய நிலையில், 2023 ஆம் ஆண்டு ஹஜ் பண்டிகை முன்னெப்போதையும் விட எங்களுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

மக்களைச் சிரமத்தில் இருந்து மீட்பதற்கு எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் முன்வந்து அதற்குத் தீர்வு காணும் மனிதாபிமானப் பணியில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தையும் திருப்தியையும் ஹஜ்ஜுப் பண்டிகை பிரதிபலிக்கிறது.

அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தின் அடையாளமாக நபி இப்ராஹிம், அவரது மகன் நபி இஸ்மாயில் மற்றும் அன்னை ஹாஜரா ஆகியோர் கருதப்படுகிறார்கள். பல நூற்றாண்டுகளாக, அவர்கள் செய்த தியாகங்களுக்கு நன்றியின் வெளிப்பாடாக முழு உலக மக்களாலும் போற்றப்படுகின்றனர்.



அண்மைக் காலங்களில் இலங்கை இவ்வாறானதொரு கடினமான 2➤

## இலங்கைக்கு 700 மில்லியன் டொலர் வழங்க உலக வங்கி அனுமதியளிப்பு




பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு 700 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கும் திட்டத்துக்கு உலக வங்கி அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, இலங்கைக்கான பாதீடு மற்றும் நலன்புரித் திட்டத்திற்கு ஆதரவாக 700 மில்லியன் அமெரிக்க டொலரை உலக வங்கி வழங்கவுள்ளது.

இதேவேளை, குறித்த நிதியில் சுமார் 500 மில்லியன் டொலர், பாதீட்டு ஆதரவிற்காக ஒதுக்கப்படும் என்றும், மீதமுள்ள 200 மில்லியன் டொலர் நெருக்கடியால் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நலன்புரி ஆதரவிற்காக ஒதுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரு ஆணைக்குழுக்களுக்கு புதிய தலைவர்களை நியமித்தார் ரணில்

தேர்தல் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய இரண்டிற்கும் புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தெஹிதெனிய, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாக முன்னர் பணிபுரிந்த ஆர்.எம்.ஏ.எல்.ரத்நயக்க ,தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராகவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழக்கூடிய இயலுமை இலங்கைக்கு உள்ளது : பொருளாதாரப் பேரவையின் தலைவர்

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழக்கூடிய இயலுமையில் உள்ளதாக உலக பொருளாதாரப் பேரவையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.




7 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை சீனா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சர்வதேச பொருளாதாரக் கட்டமைப்புக்களில் ஒன்றான உலக பொருளாதாரப் பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரென்டியை சந்தித்து கலந்துரையாடினார்.

அதன் போது, இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலவரம் மற்றும் பொருளாதார மீட்சி செயன்முறை என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியிலிருந்து மீண்டெழக்கூடிய இலங்கையின் இயலுமை தொடர்பாக உலகப் பொருளாதாரப் பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரென்டி இதன்போது நம்பிக்கை வெளியிட்டதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்டர் பக்கத்தில் 2➤

## இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய உயர்ஸ்தானிகர் நியமனம்

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய உயர்ஸ்தானிகராக அன்ட்ரூ பட்ரிக் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை உயர்ஸ்தானிகராக பதவி வகித்த சாரா ஹல்டன், தமது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பவுள்ள நிலையில் அவரது இடத்துக்கு பட்ரிக் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் உயர்ஸ்தானிகராகத் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



## எரிவாயு தட்டுப்பாடு இல்லை! உறுதிப்படுத்தியது லாஃப்ஸ்




இலங்கையின் உள்நாட்டு திரவப் பெற்றோலியம் எரிவாயுவின் இரண்டு பெரிய விநியோகஸ்தர்களில் ஒன்றான லாஃப்ஸ் எரிவாயு நிறுவனமானது, இலங்கையில் எரிவாயுத் தட்டுப்பாடு இல்லை, என உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து 2➤

## புத்தளத்தில் அதிகாலை விபத்து விஜயகலா மகேஸ்வரன் காயம்

புத்தளத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் இன்று அதிகாலை 5.40 அளவில் இடம்பெற்றதாக காவல்துறை உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் பயணித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து, வீதியை விட்டு விலகி மரமொன்றின்மீது மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாக ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த அவர் உட்பட வாகனத்தில் பயணித்த நால்வரும் புத்தளம் வைத்தியசாலையின் அவசர வி- 2➤



இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# விமானிகள் பற்றாக்குறை, போதிய சம்பளம் குறித்து உரிய நடவடிக்கைக்கு கோரிக்கை

விமானிகள் பற்றாக்குறை மற்றும் சேவையிலுள்ள விமானிகளுக்கு போதியளவு சம்பளம் வழங்கப்படாமை குறித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை விமானிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் குறித்து இலங்கை விமானிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், விமானிகள் பற்றாக்குறையால் இலங்கை விமான சேவை பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விமான சேவை முகாமைத்துவத்தினால் முன்னெடுக்கப்படும் சில தீர்மானங்களினால் விமானிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை விமான சேவைக்கு 330 விமானிகள் தேவைப்படுகின்றனர். எவ்வாறிருப்பினும் கடந்த ஆண்டு 70 இக்கும் மேற்பட்ட விமானிகள் சேவையிலிருந்து இடை விலகியமையால் தற்போது விமானிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள தாகவும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக உரிய நேரத்தில் சேவைகளை முன்னெடுப்பதில் எழுந்துள்ள சிக்கலால், விமானப் பயணிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இம்முறை இலங்கை விமான சேவை 50 மில்லியன் டொலர் இலாப மீட்டியுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. எனவே, தற்போது நிலவும் விமானிகள் பற்றாக்குறை மற்றும் சேவையிலுள்ள விமானிகளுக்கான சம்பளம் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், என்றும் இலங்கை விமானிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## வெள்ளிக்கிழமை ஏன் விடுமுறை? மத்திய வங்கி ஆளுநர் விளக்கம்



இலங்கையின் வங்கி அமைப்பின் மீது மேலும் சுமைகளை சுமத்தக்கூடாது என தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, வங்கிகளில் வைப்பு செய்த 57 மில்லியன் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

வங்கிகள் ஏற்கனவே 50 வீதத்திற்கும் அதிகமான வரிகள் மூலம் திறைசேரிக்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிப்புச் செய்துள்ளதால், அவற்றின் மீது மேலும் சுமைகளை சுமத்தக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே திரட்டப்பட்ட ஊழியர்சேமலாப நிதி மீது அரசாங்கம் கைவைக்காது என உறுதியளித்துள்ள மத்திய வங்கி ஆளுநர், ஊழியர்சேமலாப நிதியத்திற்கு 9 வீத வட்டிக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கான நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறும்வரை, ஊகங்களைத் தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் வெள்ளிக்கிழமையை வங்கி விடுமுறையாக அறிவித்தது எனவும் தெரிவித்துள்ளார்.

## பிரமிட் திட்டங்களில் முதலீடு பணம் பறிபோகும் அபாயம்!

பிரமிட் போன்ற திட்டங்களில் பணத்தை முதலீடு செய்தவர்கள், நடைபெறவுள்ள கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் கீழாகத் தமது பணத்தை இழக்க நேரிடும் என இலங்கை பிரமிட் தடுப்பு படையின் அழைப்பாளர் தரிந்து ரத்நாயக்க எச்சரிக்கை வெளியிட்டுள்ளார்.

மத்திய வங்கியினால் பிரமிட் வடிவில் உள்ள 3000 கோடி ரூபாய் பெறுமதியான கணக்குகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இலங்கை பிரமிட் தடுப்பு பிரிவின் கலந்துரையாடலின் பின்னர் அதிபர் செயலகத்தில் வைத்து தரிந்து ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரமிட் கணக்குகளில் இருக்கும் பணம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மத்திய வங்கி சந்தர்ப்பம் வழங்கவில்லை எனவும், இது தொடர்பாகக் கடிதம் மூலம் எழுத்துபூர்வமாகத் தெரியப்படுத்துமாறும் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இந்த விடயத்தை எழுத்து மூலம் அதிபர் செயலகத்திற்கு சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுவரை பெரும்பாலானோர் முதலீடு செய்து ஏமாற்றப்பட்ட ஒன்மக்ஸ் டிரி என்ற பிரமிட் திட்டத்தின் பணமும் மத்திய வங்கி தடுத்து வைத்துள்ள கணக்குகளில் இருப்பதாக தரிந்து ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## மைத்திரிபால சிறிசேன நல்லூரில் வழிபட்டார்!

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இன்றைய தினம் காலை நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

வேட்டி அணிந்து வந்த மைத்திரிபால சிறிசேன, சிதறுதேங்காய் அடித்து வழிபாடுகளில் ஈடுபட்டார். வழிபாட்டிற்கு பின்னர் ஆலயசூழலில் நின்ற முன்பள்ளி குழந்தைகள், வெளிநாட்டவர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

அவர் யாழ் ஆயரையும் நாக விகாரதிபதியையும் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இன்றைய தினம் காலை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப் பிரகாசத்தினை சந்தித்தார். அத்துடன், ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்ற அவர், வழிபாடுகளில் ஈடுபட்டதோடு நாக விகாரதிபதியையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன, மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன உள்ளிட்ட பலரும் அவரோடு உடனிருந்தனர்.



நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பெயரில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ள மைத்திரிபால சிறிசேன, இன்று வியாழக்கிழமை முதல் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு பொது நிகழ்வுகளிலும், சந்திப்புக்களிலும் ஈடுபடுகிறார்.

### பொருளாதார......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

பதிவிட்டுள்ளார்.

அதேபோன்று, பீஜிங்கில் வசிக்கும் இலங்கையர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ள அமைச்சர் அலி சப்ரி, அவர்களை வர்த்தகத் துறைசார் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும், இலங்கையின் நல்லெண்ணத் தூதுவர்களாக செயற்படுமாறும் ஊக்குவித்துள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

### எரிவாயு ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

தெரிவித்த லாஃப்ஸ் எரிவாயுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி நலிந்த குருகுலசூரிய, ஒரு மாதத்திற்குத் தேவையான எல்.பி. எரிவாயு தற்போது அனைத்து முனையங்களிலும் கையிருப்பில் உள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, எல்.பி. எரிவாயுவின் விலை குறைப்பு தொடர்பில் பேசிய குருகுலசூரிய, குறித்த திருத்தத்தின் பலன் நுகர்வோருக்கு வழங்கப்படும் என உறுதியளித்ததோடு, உரிய நேரத்தில் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மற்றும் எல்.பி. எரிவாயுவின் கிடைக்கும் தன்மையைப் பொறுத்தே இந்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லிட்ரோ காஸ் லங்காவினால் ஜூலை தொடக்கத்தில் மேற்கொள்ளப்படவுள்ள விலைத் திருத்தத்தைத் தொடர்ந்து, உள்நாட்டு எல்.பி. எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் மீண்டும் குறைக்கப்படும் என்று கடந்த ஜூன் 26 ஆம் திகதியன்று அறிவித்திருந்தது.

### புத்தளத்தில் ......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

பத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### இலக்குகளை......

முதலாம் பக்கத்தொடர்ச்சி

சூழ்நிலைக்கு முகங்கொடுத்தது. அந்தக் கஷ்டங்களைச் சமாளித்து நாட்டை தற்போதைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு மக்களின் தியாகம், அர்ப்பணிப்பு மற்றும் பொறுமை ஆகியவை மிகவும் சாதகமான காரணங்களாக அமைந்தன. நீங்கள் செய்த தியாகத்தை நினைவு கூர்வதற்கும் கடந்த வரலாற்றுக்கால முக்கியமான தருணத்தை நினைவுபடுத்துவதற்கும் ஹஜ்ஜுப் பண்டிகை மிகவும் பொருத்தமான சந்தர்ப்பமாக நான் கருதுகிறேன்.

அடுத்த ஹஜ்ஜுப் பண்டிகையின்போது பொருளாதார மற்றும் சமூகச் சிக்கல்களில் இருந்து முழுமையாக விடுபட அனைவரின் பங்களிப்பும், பங்கேற்பும் மிகவும் முக்கியமானது.

பெரியவர்களாகிய நாம் அனுபவிக்கும் இன்னல்களை வருங்காலச் சந்ததியினருக்கு விட்டுச் செல்லாமல், அவர்களை நிலையான மகிழ்ச்சியுடன் கூடிய பூகோள சமூகத்தின் பெருமை மிக்க மக்களாக உயர்த்துவதன் முக்கியத்துவத்தை முதியோர், இளையோர் என அனைவருக்கும் இந்த அற்புதமான ஹஜ்ஜுப் பெருநாளில் நான் நினைவூட்டுகிறேன்.

ஹஜ்ஜுப் பெருநாள் அனைத்து இலங்கை முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் உலகளாவிய முஸ்லிங்களுக்கும் மகிழ்ச்சியான பண்டிகையாக அமைய பிரார்த்திக்கிறேன், என ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட - maalaikkathir@gmail.com

# இறைவனுக்காக தியாகங்கள் செய்து இறையருளை பெற்றுக்கொள்வோம்!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.தௌபீக்



இறைதூதர் இப்றாஹீம் நபியின் வாழ்வில் நடந்த தியாகத்தினை வரலாறு நெடுகிலும் நினைவு கூரப்படுகின்ற தினமாக இன்றைய தினம் காணப்படுகிறது. புனித ஈதுல் அழ்கா ஹஜ்ஜ/ப் பெருநாள் கொண்டாடும் அன்புக்குரிய அனைத்து உறவுகளுக்கும்எனது உளமார்ந்த தியாகத் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன், என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்துள்ளார்.

அவரது ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில், இறைதூதர் இப்றாஹீம் நபியின் துணிச்சல் மிக்க தியாகம்தான் சத்தியத்தை இவ்வுலகில் நிலைக்கச் செய்துள்ளது. அவர்களிடமிருந்து கற்ற அர்ப்பணிப்பு, தியாகம், பொறுமை மற்றும் சத்தியத்துடன் எமது சமூகம் இயங்கவேண்டும்.

இறைதூதர் இப்றாஹீம் நபியின் அளப்பெரிய தியாகங்களை நினைவு கூருவதற்காக கட்டமைக்கப்பட்ட இஸ்லாத்தின் இறுதி கடமையான ஹஜ் பல படிப்பினைகளை கொண்ட ஒரு அமலாகும். எம்மால் முடியுமானவர்கள் ஹஜ் மற்றும் உழ்ஹிய்யா போன்றவற்றினை நிறைவே ற்றி இறையருளை பெற்றுக்கொள்வோம்.

இந்நன்னாளில் உலகளாவிய ரீதியில், குறிப்பாக எமது நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து நெருக்கடிகளும் சோதனைகளும் நீங்கி, எல்லா இன மக்களும் ஆரோக்கியத்துடனும் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும்வாழவும்வருங்காலம் இருள் நீங்கி ஒளிமயமாக அமைந்திடவும் பிரார்த்திக்கின்றேன்.

இதயத்தின் ஆழத்திலிருந்து இனிய ஹஜ்ஜ/ப் பெருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

## எல்லோரும் நிம்மதியாக வாழ இந்தப் புனித தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போம் : எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி



பாவங்கள், தீயன விலக்கி நல்லமல்களினால் நாம் இறைவனுடன் தொடர்புபட்ட புனித ஹஜ்ஜை நிறைவேற்றி, பெருநாளை கொண்டாடும் முஸ்லிம் சகோதரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் சகலரும் தேக ஆரோக்கியத்துடனும் மன நிம்மதியுடனும் வாழ இறைவன் துணைபுரிய பிராத்திக்கிறேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள், அரசியல் தளம்பல்கள், பல்வேறு முரண்பாடுகளுடன் இந்த புனிதமிகு காலத்திலும் கஷ்டத்தை அனுபவிக்கும் எமது சகோதரர்களுக்கும் பல்வேறு காரணங்களினாலும் துயருற்றிருக்கும் அனைவருக்கும் இறைவன் நல்ல சுகத்தையும், பறக்கத்தையும் வழங்கிட எல்லோரும் கையேந்தி பிராத்திப்போம் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களிடையே இந்தக் காலகட்டத்தில் ஒற்றுமை, புரிந்துணர்வு நிலையாக ஏற்பட வேண்டும் எனவும் சகலருக்கும் நிம்மதியான சந்தோசமான வாழ்க்கை அமைய இத்திருநாளில் முஸ்லிம்கள் துஆ பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்வதுடன் அல்லாஹ்வை முன்னிறுத்தி பல தியாகங்களைச் செய்து இன்று பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் எனது இனிய பெருநாள் வாழ்த்துக்கள்.

நாடு வளர்ச்சியடைய வேண்டுமாயின் நிலையான சமாதானம் இருக்க வேண்டும். அதில் இன ஒற்றுமை என்பது விசேட அம்சமாகும். இஸ்லாம் சமாதானத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்துகின்றது. அதற்கான நாளாக இன்றைய தினத்தை அமைத்துக் கொள்வோம். உலகை அச்சுறுத்தும் சகல தீங்குகளிலிருந்தும் எம்மை காக்க சகலரும் துஆ செய்வோம். நிலையானதும், ஸ்திரமானதுமான பொருளாதாரத்தை இலங்கை தேசம் அடைந்து, முன்னேற்றப் பாதைக்கு எமது நாட்டைக் கொண்டுசெல்ல, தியாகத்தை நினைவுகூரும் இந்தப் புனித நாளில் இறைவனிடம் நாம் கையேந்திப் பிராத்திப்போம் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பளு தூக்கும் போட்டியில் இலங்கைக்கு வெண்கலம் வென்றார் புஷாந்தன்




ஹொங்ஹொங்கில் நடைபெற்ற ஆசிய பசுபிக் ஆபிரிக்க பளு தூக்கும் போட்டியில் இலங்கை சார்பாகக் கலந்துகொண்ட சற்குணராசா புஷாந்தன் ஸ்குவாட் முறையில் 325 கிலோவைத் தூக்கி, மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கியுள்ளார்.

யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சற்குணராசா புஷாந்தன், இதற்கு முன்னரும் பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் கடந்த வருடம் பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற பளு தூக்கும் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தனி ஒருவராகக் கலந்து கொண்டிருந்தார். அப்போட்டியில், 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

குறித்த போட்டியில் இவர், மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளிலும் வென்று, தங்கப் பதக்கங்களை சுவீகரித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், அவர் நேற்று இலங்கை நேரப்படி மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற ஆசிய பசுபிக் ஆபிரிக்க பளு தூக்கும் போட்டியிலும் பங்கேற்று வெற்றி பெற்று நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.




## தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் இரு வருடங்கள் நீடிப்பு

மார்ச் 31, 2022 முதல் ஜீன் 30, 2023 வரை யிலான காலகட்டத்தில் வழங்கப்பட்ட அனைத்துத் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடி யாகும் காலங்களும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக் கப்பட்டுள்ளன.

மேற்கூறிய காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட, வழங்கப் படவுள்ள அனைத்துத் தற்காலிக சாரதி அனுமதிப்பத் திரங்களும் காலாவதியான நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாகும், என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அச்சிடும்பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக, காகிதத்தில் அச்சிட்ட தற்காலிக சாரதி அனுமதி ப்பத்திரங்களை மட்டுமே மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அண்மைய நாட்களில் விநியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# புத்தூர் பகுதியில் இரண்டு இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்து தாக்கிய ஊரவர்கள்!

## பொலிஸார் வான் நோக்கி துப்பாக்கிச்சூடு



தமது ஊர்ப் பெண்களின் படங்களை ஆபாசமாகச் சித்தரித்து சமூக ஊடகங்களில் வெளியிட்டார்கள் எனக் கூறி இரு இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்த ஊரவர்கள், இளைஞர்கள் மீது கடுமையான தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையால் பொலிஸார் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

புத்தூர் பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, புத்தூர் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் பெண்களின் படங்கள் கணினி வரைகலை (கிராபிக்ஸ்) மூலம் ஆபாசப் படங்களாக மாற்றம் செய்யப்பட்டு சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன.

அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊரவர்கள் இணைந்து முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில், நேற்றிரவு ஊரில் உள்ள இரு இளைஞர்களே அவ்வாறு பெண்களின் படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்தனர் எனக் குற்றம் சாட்டி, அந்த இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்த ஊரவர்கள் இளைஞர்கள் மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன், வீட்டினுள் இருந்த பெறுமதியான பொருட்களையும், வீட்டின் முன் நின்ற வாகனங்களையும் அடித்து உடைத்து அவற்றுக்குத் தீயும் வைத்துள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலிப் பொலிஸார், தாக்குதலில் காயமடைந்த இளைஞர்களை அங்கிருந்து மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முயன்ற போது , பொலிஸாருடன் ஊரவர்கள் முரண்பட்டதுடன் பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதில் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் காயமடைந்த நிலையில், நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதையடுத்து அங்கு கூடியிருந்த ஊரவர்களை அவ்விடத்தில் இருந்து அகற்றி விட்டு, காயமடைந்த இரு இளைஞர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஆகியோரை மீட்ட பொலிஸார், அவர்களைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

## சமூக செயற்பாட்டாளர் ஜெயக்குமார் பரந்தனில் ரி.ஐ.டி.யினரால் விசாரணை

விவேகானந்த நகர் கிராம அபிவிருத்திச் சங்கம், கரைச்சிப் பிரதேசத்துக்குட்பட்ட கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் என்பவற்றின் தலைவரும், கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கம், கிளிநொச்சிச் சேவைச்சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் உபதலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கரைச்சிக் கோட்டக் கிளையின் செயலாளருமான திரு. கறுப்பையா ஜெயக்குமார் அவர்கள் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி.) விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பரந்தனில் உள்ள ரி.ஐ.டி. அலுவலகத்துக்கு அழைக்கப்பட்ட இவர், ஏறத்தாழ மூன்று மணிநேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கனகபுரம் துயிலுமில்ல மாவீரர் பணிக்குழுவின் தலைவரும் அதிபருமான தங்கவேலு கண்ணபிரான், செயலாளர் வீரவாகு விஜயகுமார் ஆகியோர் ஏற்கனவே ரி.ஐ.டி. யினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், அப்பணிக்குழுவின் பொருளாளரான கறுப்பையா ஜெயக்குமாரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## கிளிநொச்சி துப்பாக்கிச் சூடு தொடர்புடைய இருவர் கைது

துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கிளிநொச்சி மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை கிளிநொச்சி உதயநகர் பகுதியில் வைத்து காரில் பயணித்தவர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இருவரையும் கிளிநொச்சி மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தேடி வந்தனர்.

இந்த நிலையில், சந்தேக நபர்கள் இருவரும் இன்று பகல் திருநகர் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

அவர்களிடமிருந்து குற்றச்செயலுக்குப் பயன்படுத்தப்பட்ட உள்ளூர்த் துப்பாக்கியும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இரு தரப்புக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடே குறித்த குற்றச் செயலுக்கு வலுச்சேர்த்துள்ளதாக பொலிசாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களையும், தடயப்பொருட்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்

## வவுனியாவில் எரிந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்பு

வவுனியா, காத்தார்சின்னகுளம் பகுதியில் எரிந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த குறித்த 23 வயது இளைஞரின் பெற்றோர் நேற்று முற்பகல் வெளியில் சென்றுவிட்டு பிற்பகல் வீடு திரும்பியிருந்தனர். இதன்போது குறித்த இளைஞர் வீட்டின் பின்புறத்தில் எரிந்த நிலையில் சடலமாகக் கிடந்தது கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர். சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவிடம் இருந்து அதிக விலை கொடுத்து ட்ரோன்களை வாங்குவது ஏன்? – காங்கிரஸ் கேள்வி

இந்தியாவில் குறைந்த விலையில் தயாரிக்க முடியும் என்கிறபோது, அமெரிக்காவிடம் இருந்து அதிக விலை கொடுத்து ட்ரோன்களை வாங்குவது ஏன்? என்று இந்திய மத்திய அரசிடம் காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பி உள்ளது.

அமெரிக்காவிடம் இருந்து ஆயுதப் படைகளுக்கு "31 எம்.கியூ.-9பி பிரிடேட்டர் யு.ஏ.வி." வகையான ட்ரோன்களை வாங்க மத்திய பா.ஜ.க. அரசு முடிவு செய்துள்ளது. இந்த அதிநவீன ட்ரோன்களின் விலை தொடர்பாக மாறுபட்ட தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில் இந்திய மத்திய ராணுவ அமைச்சகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையில், அமெரிக்காவிடம் இருந்து வாங்கவுள்ள ட்ரோன்கள் விலை குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இவற்றை கொள்முதல் செய்வதற்கு முன்பாக பிற நாடுகளுக்கு இந்த ட்ரோன்கள் என்ன விலைக்கு விற்பனை செய்யப்பட்டன என்பது குறித்து ஆராயப்படும் எனக் கூறப்பட்டிருந்தது.

காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் பவன் கெரா, டெல்லியில் நிருபர்களைச் சந்தித்தபோது, நாட்டின் பாதுகாப்பு முதன்மையானது. அதே நேரத்தில், அமெரிக்காவிடம் இருந்து பிரிடேட்டர் ட்ரோன்கள் வாங்குவதில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

பிரிடேட்டர் ட்ரோன் வர்த்தக பேரத்தில் முழுமையான வெளிப்படைத்தன்மை தேவை. முக்கிய கேள்விகளுக்கு நாடு பதில்களை எதிர்பார்க்கிறது. ட்ரோன்களை வாங்க 3.072 பில்லியன் டொலர் கொடுக்கப்படுவதாக கூறப்படுகிறது. ஒரு பிரிடேட்டர் ட்ரோன் விலை 812 கோடி. 31 ட்ரோன்கள் வாங்குவதற்கு 25 ஆயிரம் கோடி கொடுக்கப்படவுள்ளது. ஆனால், இந்த ட்ரோன்களை உள்நாட்டில் டி.ஆர்.டி.ஓ. அமைப்பு 10 முதல் 20 சதவீத செலவிலேயே உருவாக்க முடியும்.

அப்படியானால் ஏன் இந்த அதிக விலை கொடுக்கப்படுகிறது? இந்த ட்ரோன்களை வாங்குதலை இறுதி செய்வதில் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சர்கள் குழுக் கூட்டம் ஏன் கூட்டப்படவில்லை? பிற நாடுகளை விட அதிக விலையை ஏன் இந்தியா கொடுக்கிறது? எதற்காக நாம் அதிக விலை கொடுக்க வேண்டும்? என்று பல சந்தேகங்களை எழுப்பியிருக்கிறார்.

## அமெரிக்காவுக்கு அகதிகளை அழைத்துச் சென்றவர் கைது

அமெரிக்கா கலிபோர்னியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் கனடாவிலிருந்து அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக சுமார் 800 இந்தியர்களை அழைத்துச் சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த, 49 வயதுடைய ரஜிந்தர் பால் சிங் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

சந்தேகநபர், சுமார் 4 ஆண்டுகாலமாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர் இதன் மூலம் 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் வரை ஈட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார், 45 ஆயிரம் டொலர்களையும் போலி ஆவணங்களையும் கைப்பற்றியுள்ளனர். குற்றத்தை ஒப்புக்கொண்ட சந்தேகநபருக்கு, 45 மாதங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபரும் அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசித்து வந்ததையடுத்து, சிறைத்தண்டனைக்குப் பிறகு, அவர் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்படுவார் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# புர்கினோ பாசோவில் ராணுவம் - ஆயுதக்குழு மோதலில் 70 க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



மேற்கு ஆபிரிக்கா நாடான புர்கினோ பாசோவில் ஆயுதக் குழுக்கள் அதிக அளவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இதனால் ராணுவத்தினரைக் கொண்டு நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் வேலையில் அரசு ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில் பாம் மாகாணத்தின் நம்சிகுவா பகுதியில் ராணுவ வீரர்கள் வாகனங்களில் அணிவகுத்து சென்று கொண்டிருந்தபோது அங்கு பதுங்கியிருந்த ஆயுததாரிகள் மறைந்திருந்து ராணுவ வீரர்களின் வாகனங்கள் மீது துப்பாக்கியால் சுட்டும், குண்டுகள் வீசியும் திடீர்த் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இராணுவ வீரர்கள் எதிரிகளை நோக்கி ப் பதில் தாக்குதல் நடத்தியதில், இதனால், அந்தப் பகுதி போர்க்களம் போல் மாறியது. இதில் 40 ஆயுததாரிகளை ராணுவத்தினர் சுட்டுக்கொன்றதாகவும், 34 ராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தாக்குதலுக்கு உடனடியாக எந்த அமைப்பும் பொறுப் பேற்கவில்லை. இது குறித்து விசாரணைகள் மேற்கொள்ள ப்படுவதாக ராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# ராகுல் காந்தி மணிப்பூருக்குப் பயணம்



இந்தியாவின் மணிப்பூரில் பெரும்பான்மையாக உள்ள மைதேயி சமூகத்தினர் தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து கோரி வருகிறார்கள். இதற்கு குகி பழங்குடியினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இந்தப் பிரச்சினையை முன்வைத்து இரு சமூகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியது. கடந்த 50 தினங்களாக அங்கு வன்முறை நீடித்து வருகிறது.

கலவரம் ஏற்பட்ட பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு, 349 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கலவரம் தொடர்பான வழக்குகளை சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரித்து வருகிறது.

கலவரத்தைக் கட்டுப்படுத்த துணை ராணுவப் படைகள் குவிக்கப்பட்ட போதிலும், மத்திய, மாநில அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகள் பலனளிக்காமல் உள்ளன, என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மணிப்பூர் நிலைமை குறித்து இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கடந்த 24 ஆம் திகதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினார். அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் மணிப்பூர் நிலைவரம் குறித்து இந்தியப் பிரதமர் மோடியிடம் அமித்ஷா எடுத்துரைத்ததாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், இரண்டு நாள் பயணமாக ஜூன் 29 இன்று காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி மணிப்பூர் மாநிலத்துக்குப் பயணமாகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு கலவரத்தால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறுவதோடு, இம்பால் மற்றும் சுராசந்த்பூரில் உள்ள சமூக அமைப்புகளையும் சந்தித்து ராகுல் காந்தி பேசுவார் என்று காங்கிரஸ் கட்சித் தகவல்கள் கூறியிருந்தன.

மணிப்பூர் கலவரம் தொடர்பாக நடந்த அனைத்துக் கட்சி கூட்டத்தைக் காங்கிரஸ் புறக்கணித்த நிலையில் ராகுல் காந்தியின் மணிப்பூர் பயணம் அமைந்துள்ளது.

# சீனாவால் திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட ஆயுதமா? கொரோனா வைரஸ் பற்றி சீன ஆய்வாளர் தகவல்




சீனா திட்டமிட்டு கொரோனா வைரஸை ஓர் ஆயுதமாகத் தயாரித்ததாக வூகான் ஆய்வு மையத்தில் பணிபுரிந்த ஆய்வாளர் ஒருவர் கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனா ஆய்வு மையத்தில் பணி புரிந்த தமது சகாக்களிடம் நான்கு வகையான கொரோனா வைரஸ்கள் கொடுக்கப்பட்டு, அவற்றில் விரைவாகப் பரவக்கூடியதைக் கண்டுபிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாக சாவோ ஷாஹோ என்ற ஆய்வாளர் தெரிவித்துள்ளார். ஜெனிபர் ஜெங் என்ற சர்வதேசப் பத்திரிகையாளர் சங்கத்தின் உறுப்பினருக்கு அளித்த பேட்டியில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே, கொரோனா வைரஸ் சீனாவால் திட்டமிட்டு உருவாக்கப் பட்டதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்பட்டிருந்தன. ஆனால், வூகான் வைரஸ் ஆய்வு மையத்தில் பணிபுரிந்த ஒருவர், இதுபோன்ற தகவலைக் கூறுவது இதுவே முதல்முறையாகும்.

# அழிக்கக் கூடிய மையைக் கொண்ட பேனாவால் அரச ஆவணங்களில் கையொப்பமிடுகிறார்!

## பிரித்தானியப் பிரதமர் மீது எழும் குற்றச்சாட்டு

பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் அரசாங்க ஆவணங்களில் கையெழுத்திட, எளிதில் அழிக்கக் கூடிய மையைக் கொண்ட பேனாக்களைப் பயன்படுத்து கிறார் என்று புதிய சர்ச்சையொன்று கிளம்பியுள்ளது.

த கார்டியன் நாளிதழ் வெளியிட்ட செய்தியில், பிரதமர் ரிஷி சுனக் இப்படியான பேனாவைப் பயன்படுத்தியதாகச் சொல்லப்பட்டுள்ளது.

இங்கிலாந்து மதிப்பில் 4.75 பவுண்டுக்குக் கிடைக்கும் “பைலட் வி“ வகைப் பவுன்டன் பேனாவைப் பயன்படுத்தி பிரத மர் ரிஷி அமைச்சரவைக் குறிப்புகள், அரசாங்க ஆவ ணங்கள், சர்வதேச உச்சி மாநாடுகளின் உத்தியோகபூர்வ கடிதங்கள் போன் றவற்றில் கையொப்பமிடுகிறார் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேனாவின் மையானது, எளிதில் அழிக்கக்கூடிய தன்மையைக் கொண்டது எனக் கூறப்படுகிறது.

ரிஷி, நிதியமைச்சராக இருந்த போதும், இப்போது பிரதமராக இருக்கும்போதும் இந்த வகைப் பேனாவையே பயன்படுத்துகிறார் என்று “பைலட் வி“ பேனா நிறுவனமும் அந்தச் செய்தியை உறுதிப்படுத்தியுள்ளது.

எளிதில் அழிக்கக் கூடிய மையைக் கொண்ட பேனாக்கள் மூலம் கையொப்பமிடுவதால், ரகசிய ஆவணங்களின் பாதுகாப்புக் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுவதாக பிரித்தானிய எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.



இதுதொடர்பாகப் பேசியுள்ள பிரதமர் அலுவலக செய்திதொடர்பாளர், மக்கள் சேவைத் துறையால் இந்தப் பேனா வழங்கப்பட்டது. எப்போதாவது மட்டுமே இது பயன்படுத்தப்படுகிறது. ஒருபோதும் தான் எழுதியதை அழித்துத் திருத்த பிரதமர் ரிஷி சுனக் இந்தப் பேனாவை பயன்படுத்தியதில்லை, என்று விளக்கமளித்துள்ளார்.

# ராஜஸ்தான் சீர்திருத்தப்பள்ளியில் இருந்த 15 சிறுவர்கள் தப்பி ஓட்டம்

இந்தியாவின் ராஜஸ்தானின் ஜெய்பூர் நகரில் ஒரு சிறுவர் சீர்திருத்தப்பள்ளி உள்ளது. இங்கு ஏராளமான இளம் குற்றவாளி சிறார்கள் அடைக்கப்பட்டு உள்ளனர். நேற்று காலை இந்த சிறார் முகாமில் இருந்து பலர் தப்பி ஓடியதாக தெரியவந்தது. சோதனையிட்டபோது 15 இளம்சிறார்கள் மாயமாகி இருந்தனர். அங்குள்ள கழிவுநீர் வெளியேறும் துவாரம் அருகே சுவரை உடைத்து அவர்கள் தப்பி ஓடியது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் 16 வயதுக்குட்பட்டவர்கள். திருட்டு, வழிப்பறி, கற்பழிப்பு, பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள். இந்த சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன், தப்பி ஓடிய இளம் குற்றவாளிகளை பிடிக்கும் பணியில் தனிப்படை போலீசார் ஈடுபட்டு உள்ளனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.06.2023இல் வெளியிடப்பெற்றது.